**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**அசல் வழக்கு எண்.192/2023**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் புதன் கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அலமேலு மங்கை | க/பெ.: | செல்லதுரை |
| கிராமம்: | ஆயக்கரம்புலம் | தாலுக்கா: | வேதாரண்யம் |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 59 | முகவரி: | வேதாரண்யம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.09.2025.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 25.04.1993 –ல் 1,4 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 24.06.1996 –ல் 1,4 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 13.06.2002 –ல் 1,4 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த பிழை திருத்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.27.02.2003 –ல் 5ம் பிரதிவாதி , 6–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 22.05.2014–ல் 5,6, பிரதிவாதிகள், 7ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 20.02.2017–ல் 10ம் பிரதிவாதிக்கு , 6 பிரதிவாதி

எழுதிக்கொடுத்த கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 16.10.2000–ல் எனது தந்தை கோவிந்தராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்துக்களுக்கு உண்டான சிட்டா – (எண்ணிக்கைகள் –6) கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.7 ஆகும்.** 30.06.2021–ல் வாதி , 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதியுடன் உள்ளது அது **வா.சா.ஆ.8** ஆகும். 02.07.2021–ல் 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்ததற்கான அஞ்சல் கவர் அசல் **வா.சா.ஆ.9** ஆகும். 02.07.2021–ல் 4ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்ததற்கான அஞ்சல் கவர் அசல் **வா.சா.ஆ.10** ஆகும். 08.07.2021–ல் 7ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்ததற்கான அஞ்சல் கவர் அசல் **வா.சா.ஆ.11** ஆகும். 27.07.2021–ல் 6ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.12** ஆகும். 20.07.2021–ல் 9ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு அசல் வா.**சா.ஆ.13** ஆகும். எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது) **வா.சா.ஆ.14** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**6, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.